இன்றியாமையாப் பொருள்கள் கட்டுப் பாடு, கேட்டுப்பெறல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மசோதாவை மன்றத்தின்முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப் பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மசோதாவை மன்றத்தின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகப் படுத்தப் பட்டது.

(உ) 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967) மீதான கூட்டு ஆய்வுக் குழுவின் அறிக்கையை [அ] பேரவைமுன் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் இன்று 12 மணிக்குக் கூட வேண்டியது, 12-30 மணியளவில் பேரவைத் தலைமை அலுவல் அறையில் கூடும்.

8. 1967-68-ஆம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு மின்சாரக் கழகத்தின் நிதிநிலை மீதான விவாதத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

அ 1967 நவம்பர் 24-ம் தேதியிட்ட தமிழக அரசிதழ் (சிறப்பிதழ்) 73–77-ம் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.